புரட்சிப்

# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • பிப்ரவரி (February), 12, 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 6 • விலை(PRICE) ரூ.6.00




## பகவத்துக்குப் பதிலடி

**● ஆர்.எஸ்.எஸ் தலைவராக இருப்பதற்கு 'இந்து' மட்டுமே; தகுதி ஜாதி தடையல்ல! –மோகன் பகவத்**

ஆனால் இந்துவாக இருப்பதற்கு ஜாதி மட்டுமே தகுதி; இதை எதிர்க்க மாட்டீர்களா?

**● பாரம்பரியமாக ஜாதிக்கும் தொழிலுக்கும் இருந்த தொடர்பு தற்போது மறைந்து விட்டது.**

**–மோகன் பகவத்**

மறைந்துவிடக் கூடாது என்பதால் தான் மோடிஜி 'விஸ்வகர்மா திட்டத்தை' கொண்டு வந்து இருக்கிறார். அர்ச்சகர் தொழிலை ஜாதியிலிருந்து பிரித்து விடக்கூடாது என்பதால் தான் நீங்கள் கட்டிய ராமர் கோயிலில் பிராமணர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக இருக்கின்றார்கள். அந்த பாராம்பரிய தொழிலை உருவாக்கியதே, நீங்கள் பேசும் 'இந்து' மதம் தானே!

**● ஜாதிப் பாகுபாடுகளை அகற்ற மக்கள் மனதிலிருந்து ஜாதியை அகற்ற வேண்டும்**

**–மோகன் பகவத்**

மிக்க நல்லது. அதேபோல் வர்ணாஸ்ரமப் பாகுபாடுகளை வலியுறுத்தும் மனு சாஸ்திரங்களையும், பகவத் கீதையும், வேத உபநிடங்களையும் இந்து மதத்தில் இருந்து அகற்ற தயாரா?

**● சமூகப் பாகுபாடுகளைக் களைய வேண்டும்**

**–மோகன் பகவத்**

சபாஷ். உங்கள் அமைப்பில் பெண் சமூகம் மீதான பாகுபாடுகளை ஒழித்து அவர்களையும் முதலில் உறுப்பினர் ஆக்குங்கள்.

**● எனக்கு 75 வயதாகிவிட்டது; பதவி விலக தயாராகி விட்டேன். –மோகன் பகவத்**

யாருக்காக கூறுகின்றீர்கள் என்பது புரிகிறது, மோடி இதை எல்லாம் காதில் வாங்க மாட்டார்.

**● சாவர்க்கருக்கு 'பாரத ரத்னா' பட்டம் வழங்க வேண்டும். –மோகன் பகவத்**

**சாவர்க்கரின் தேசபக்தி என்ன தெரியுமா?**

● லண்டனில் சித்பவன் பார்ப்பனர்களுக்கு மட்டுமே தனி அமைப்பைத் தொடங்கியவர்.

● வெடிகுண்டு தயாரித்த தனது உடன்பிறந்த அண்ணன் பாபா ராவ் என்பவரை கைது செய்ததற்காக பிரிட்டிஷ் அதிகாரி கர்சான் வில்லி கொலையிலும், அவரை காப்பாற்ற ஓடோடி வந்த டாக்டர் கோவாஸ்லால் காகா கொலையிலும் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டவர்.



● மன்னித்து விடுதலை கோரியதோடு பிரிட்டிஷ் ஆட்சிக்கு விசுவாசமாக இருப்பேன் என்று மன்னிப்பு கடிதங்களை எழுதி வந்தவர்.

● காந்தி அரசு வேலைகளைப் புறக்கணிக்குமாறு வேண்டுகோள் விடுத்த போது; பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவாக வேலை புறக்கணிப்பை எதிர்த்தவர்.

● விடுதலைக்குப் பிறகு 'மராத்தா' பத்திரிக்கையில் சாவர்க்கர் எழுதிய ஒரு கட்டுரையில் 'சுயராஜ்யம்' என்ற வார்த்தை இடம் பெற்றதற்காக பிரிட்டிஷ் ஆட்சி விளக்கம் கேட்டது. அப்போது ஒரே ஒரு இடத்தில் மட்டும் பயன்படுத்தினேன் அதுவும் "சுயராஜ்யம் வேண்டுமென்ற நோக்கத்திற்காக அல்ல மன்னித்து விடுங்கள்" என்று கடிதம் எழுதியவர்.

● 1947 அரசியல் நிர்ணய சபை தேசிய மூவர்ணக் கொடியை அறிவித்தபோது அதை அடுத்த வாரத்திலேயே இந்துஸ்தானின் தேசியக்கொடியாக மூவர்ணக் கொடியை ஏற்க முடியாது ஒரே தேசியக் கொடி காவிக்கொடி என்று அறிவித்தவர். (1947–சூலை 29).

**இவர் ஆர்.எஸ்.எஸ் பார்வையில் தேசபக்தர் இவருக்குத்தான் பாரத ரத்னா பட்டமா?**

**● ஒவ்வொருவரும் மூன்று குழந்தைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.**

**–மோகன் பகவத்**

இது இந்து மதத்திற்கு மட்டும் விடுத்த கோரிக்கை. இந்து மக்கள் தொகை அதிகரிக்க வேண்டும். அவர்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்தாலும் பரவாயில்லை..... ஆனால் குழந்தையைப் பெற்றெடுக்கும் பெண்களை மட்டும் சுயம் சேவக்குகளாக அங்கீகரிக்கவே மாட்டார்கள். காந்தியை கொன்றவர்களின் கபட நாடகங்களைத் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது.

**–விடுதலை இராசேந்திரன்**

## இதுதான் இந்திய நாடாளுமன்றமா?

இந்தியாவின் நாடாளுமன்றத்தின் ஜனநாயகப் பெருமையை பார்த்து உலக நாடுகள் கைகொட்டி சிரிக்கின்றன. குடியரசுத் தலைவர் தேசப் பாதுகாப்பு குறித்து ஒவ்வொரு ஆண்டும் நாடாளுமன்றத்தில் பேசுவதும் அதற்கு பிரதமராக இருப்பவர் நன்றி கூறுவதும் மரபு.

"நான் அப்படியெல்லாம் நன்றி கூற முடியாது; நாடாளுமன்றத்தில் எனக்கே பாதுகாப்பு இல்லை; குறிப்பாக நான் அமர்ந்திருக்கும் இருக்கையிலேயே எனக்கு ஆபத்து; சந்தேகமிருந்தால் அந்த சபாநாயகர் நாற்காலியில் ஒருவரை உட்கார வைத்து இருக்கிறோமே அவரை கேட்டுப் பாருங்க"... என்று சபாநாயகரைக் கொண்டு அறிவிக்கச் செய்துவிட்டார் நாட்டின் பிரதமர்.

இதே நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசத் தொடங்கினார். கைலாச மலையை சீனப் படைகள் ஆக்கிரமித்து வரும்போது இந்திய இராணுவ தளபதி அவசரமாக ஆலோசனை கேட்டார். தடுத்து நிறுத்துவதா? வேண்டாமா? என்று கேட்டிருக்கிறார். தேசத்தை காக்கும் ராணுவ அமைச்சர் ராஜநாத் சிங் கருத்து கூறவில்லை. பிரமர் மோடியோ " சீனப்படைகளை எதிர்த்து போரிடலாமா? அல்லது ஆக்கிரமிப்புக்கு வழிவிடலாமா என்பது உங்கள் முடிவு எனக்கும் இதற்கும் தொடர்பில்லை" என்று கூறிவிட்டார் என்று ராணுவ தளபதியாக செயல்பட்ட நரவேனா அவர்களே தனது நூலில் பதிவு செய்ததைத் தான் ராகுல் பேசினார்.

பதறிப் போன பாஜக எம்பிக்களும், அமைச்சர்களும் "அதைப் பேச நீ யார்? பேசாதே! எங்களுக்கு இல்லாத தேச பக்தி உனக்கு வந்துவிட்டதா" என்று கூக்குரலிட்டு பேச்சை அடக்கி விட்டார்கள். தொடர்ந்து பேசவே அனுமதிக்கவில்லை. "இராணுவ தளபதியின் அந்த நூலை வெளியிட நாங்கள் அனுமதி மறுத்துவிட்டோம் அந்த வெளிவராத நூலில் இருந்து எப்படி எடுத்துக் காட்டலாம்" என்று கொந்தளித்தார்கள்.

ஆண்டுதோறும் மாணவ, மாணவிகளிடையே மோடி உரையாடும் காட்சிகளை தொலைக்காட்சிகள் ஒளிப்பரப்புகின்றன. தேர்வுகளை எழுதப் போகும் மாணவர்களுக்கு மன அழுத்தங்களை மோடி தீர்த்து வைக்கிறார் என்று பெருமை பேசுகிறார்கள். மாணவர்களின் கேள்விகளுக்கு மோடி பதில் கூறுவார். ஆனால் நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களின் கேள்விக்கு வாய் பேசமாட்டார். சீனப் படையை எதிர்த்து நமது மண்ணை ஆக்கிரமிக்க அனுமதிக்க கூடாது என்று ஏன் மோடியோ ராஜநாத் சிங்கோ உத்தரவிடவில்லை.

ராணுவ தளபதியே வெளியிட்ட உண்மையை ஏன் மறைக்க வேண்டும்?

அந்த நூலை வெளியிட ஏன் அனுமதி மறுக்க வேண்டும்?

ராணுவ தளபதி கூறுவது உண்மை இல்லை என்றால் அதை மறுப்பதற்கு ஏன் தயங்க வேண்டும்?

வேத மந்திரங்கள் முழங்க பல நூறு கோடி ரூபாயில் கட்டப்பட்ட புதிய நாடாளுமன்றம் எதற்காக? இப்படி பேச்சை தடுப்பதற்கும், பேச மறுப்பதற்கும் தானா?

## இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் 18,727 அரசுப்பள்ளிகள் மூடல்

*நாடு முழுவதும் மூடப்பட்டுள்ள அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை குறித்து கேரளத்தைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்பி ஜான் பிரிட்டஸ் கேள்வி எழுப்பியிருந்தார். இந்தக் கேள்விக்கு மத்திய கல்வி அமைச்சகம் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ளது.*


*கடந்த 5 ஆண்டுகளில் நாடு முழுவதும் சுமார் 18,727 பள்ளிகள் மூடப்பட்டிருப்பதாகவும் அதிலும் பாஜக ஆளும் மாநிலங்களில் அதிகமான அளவில் பள்ளிகள் மூடப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவின் பள்ளிக் கல்வி முறையில் ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 18,727 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டுள்ள நிலையில், ஓராண்டிலேயே சுமார் 8475 தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இது கல்விக்கான அணுகல், கிராமப்புற வாய்ப்புகள் மற்றும் கல்வி சமத்துவம் குறித்து பெரும் கேள்விகளை எழுப்பியுள்ளது, நாட்டின் பொதுக் கல்வி அமைப்பில் அடிப்படை மாற்றங்களை இது சுட்டிக்காட்டுகிறது.*

*அரசிதழ் தரவுகளின்படி, பொதுப் பள்ளிகளின் வீழ்ச்சியையும், தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் எழுச்சியையும் மாநிலங்களவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி. ஜான் பிரிட்டாஸ் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த 5ஆண்டுகளில் 18,000க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளதை அவர் கவலையுடன் குறிப்பிட்டார். இந்த நிலை நாட்டின் பொதுக் கல்வி முறைக்கு ஆபத்தானது என்று x தளத்தில் பதிவிட்டுள்ளார்.*

*அரசு புள்ளிவிவரங்களின்படி, இந்தியாவில் அரசுப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 2020-21ம் ஆண்டில் 10,32,049 ஆக இருந்தது, இது 2024-25ம் ஆண்டில் 10,13,322 ஆகக் குறைந்துள்ளது. இதன் மூலம், 5 ஆண்டு காலத்தில் 18,727 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. இது பொதுக் கல்விப் பின்னணியில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை பிரதிபலிக்கிறது.*

*இந்தக் குறைவு நாடு தழுவிய அரசு பள்ளி நெட்வொர்க்கின் சுருக்கத்தைக் காட்டுகிறது. இலவச கல்விக்காக அரசுப் பள்ளிகளை நம்பியிருக்கும் கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு இது கவலைகளை எழுப்புகிறது. பள்ளிகள் மூடுவிழாவுக்கு குறைந்த மாணவர் சேர்க்கை போன்ற காரணங்கள் கூறப்பட்டாலும், இந்த வீழ்ச்சி பொதுக் கல்வி அமைப்பில் பெரிய கட்டமைப்பு மாற்றங்களைக் குறிக்கிறது.*

*அதே நேரம், தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் 37 அரசுப் பள்ளிகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் 512 தனியார் பள்ளிகள் தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ளன என்பதை குறிப்பிட வேண்டும். தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை கூடியது மட்டுமல்லாமல், உயர்கல்வி விழுக்காடும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அதிலும் பெண்களின் பங்கு, தனிச்சிறப்பிற்குரிய இடத்தைப் பெற்று வருகிறது.*



**ஜாதி மறுப்பு திருமணங்களை ஆதரிக்கும் சமையல் கலைஞர் தாமு. சமூக ஒற்றுமையை ஊக்குவிக்கும் நோக்கில் மாற்று ஜாதி திருமணங்களை தேர்வு செய்யும் தம்பதிகளுக்கு தனது திருமண கேட்டரிங் சேவைகளில் சுமார் 50 விழுக்காடு வரை சலுகைகளை வழங்குவதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு சமூக ஊடகங்களில் பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது.**

**தலையங்கம்**

# கேரள உயர்நீதிமன்றத்தின் சரியான தீர்ப்பு

தமிழ்நாட்டில் இந்து கோயில்களில் பிற மதத்தினர் நுழையக் கூடாது; அதற்கு நீதிமன்றம் தடை போட்டுவிட்டது; கோயில் கொடி மரத்திலேயே அறிவிப்பு பலகையை நிறுவ வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றக் கிளை தீர்ப்பளித்தது. குறிப்பாக பழனி முருகன் கோயிலில் இந்த அறிவிப்புப் பலகையை நிறுவ நீதிபதி உத்தரவிட்டார். சித்தர் மரபில் உருவாக்கபப்ட்ட பழனி கோயிலில் கொடி மரங்களே இல்லை என்பது கூட அந்த நீதிபதிக்கு தெரியவில்லை.

இதற்கு நேர்மாறாக இப்போது கேரள உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கி இருக்கிறது. இந்து கோயிலில் பிற மதத்தினரையும் அனுமதிக்க வேண்டும்; அதற்கேற்ப சட்டங்களைத் திருத்த வேண்டும் என்று நீதிபதிகள் ராஜா விஜயராகவன் மற்றும் கே.வி. ஜெயக்குமார் அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

அடூர் என்ற ஊரில் உள்ள பார்த்தசாரதி கோயிலில் 2023-ஆம் ஆண்டு நடந்த கிருஷ்ண ஜெயந்தி விழாவில் பங்கேற்க இரண்டு கிறிஸ்துவ பாதிரியார்கள் அழைக்கப்பட்டனர். 'திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு' நிர்வாகத்தின் கீழ் இந்தக் கோயில் இருக்கிறது.

இதை எதிர்த்து சுனில் நாராயண நம்பூதிரி என்ற பார்ப்பனர் வழக்கு தொடர்ந்தார். தேவஸ்வம் போர்டின் சட்டம் 3(A) - பிற மதத்தினர் நுழைவதற்குத் தடை விதிப்பதை சுட்டிக் காட்டினார்.

கோயில் நுழைவுக்குத்தான் தடை; கோயில் விழாவில் பங்கேற்கத் தடையில்லை என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி வழங்கிய தீர்ப்பு மிகவும் முக்கியமானது.

"இந்த சட்டப் பிரிவுகளுக்கு விளக்கங்களைக் கூறுவதைவிட இன்றைய சூழலில் இப்படி ஒரு சட்டம் தேவையா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். அனைத்து தரப்பினரையும் கலந்து ஆலோசித்து புதிய சட்டத்தை உருவாக்க வேண்டும். சமூக நல்லிணக்கத்தை உறுதி செய்வதும் மக்கள் நலனை மேம்படுத்துவதுமே எந்த ஒரு சட்டத்தின் நோக்கமாக இருக்க முடியும்" என்று நீதிபதிகள் சட்டத்தை எந்தப் பார்வையில் அணுக வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

மதங்களுக்கு இடையிலான பகைமையை வெறுப்பு உணர்வுகளை குடிமக்களிடம் தடுக்க வேண்டும். அதே போன்று ஜாதிகள், உட்ஜாதி பிரிவுகள், சமூகங்களுக்கு இடையேயும் பாகுபாடுகளையும் பகை உணர்ச்சிகளையும் உருவாக்குவதற்கு சட்டங்களை கருவியாக பயன்படுத்தக் கூடாது. (Statutes Rules and Regulations should not be allowed to become instruments)

சமூகம் இப்போது மேம்பட்டு வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய சமூகமாக மாறிவரும் நிலையில் சட்டங்களை சமூக ஒற்றுமை என்ற நோக்கத்தோடு அதற்கான விளக்கங்களை மதிப்பிட வேண்டும் என்று தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(As Society advances and becomes more inclusive and statutory provisions and subordinate legislation must be interpreted in a manner that advances constitutional values and social cohesion)

தமிழ்நாட்டில் பார்ப்பன நீதிபதிகள் சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கவும் மத பகைமையைத் தூண்டி விடுவோரைப் பாதுகாக்கவும் சட்டங்களைப் பயன்படுத்துகின்றனர். இந்த நீதிபதிகளின் சனாதன தர்மப் பார்வைக்கு சம்மட்டி அடியாக கேரளா நீதிபதியின் தீர்ப்பு வந்துள்ளது. வரவேற்கத்தக்க தீர்ப்பு.

# உ.பி 'ராமராஜ்ய' ஆட்சியில் சங்கராச்சாரிக்கு தடை

தமிழ்நாட்டில் ஒரு கும்பல் நீதிமன்றத்தில் இந்துக் கடவுள்களின் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். இவர்களின் வேலை இந்துக் கடவுளை புண்படுத்தி விட்டடார்கள் என்று மனு போடுவதுதான். உடனே பாஜக மேடைகளில் 'திமுக ஆட்சி! இந்து விரோத ஆட்சி!" என்று முழங்குவார்கள். உ.பியில் 'ராமராஜ்யம்' நடத்தும் யோகியின் ஆட்சியில் இப்போது ஒரு பார்ப்பன சங்கராச்சாரியை 'வச்சு செய்கிறார்கள்'

ஜோதிர்மட சங்கராச்சாரி அவிமுக்தேஸ்வரானந்த் திரிவேணி சங்கமத்தில் நீராட தனது சீடர்களுடன் பல்லக்கில் சென்றார். "சங்கராச்சாரி பல்லக்கை நேரடியாக நதியின் கரை வரை அனுமதிக்க முடியாது அதற்கு உனக்கு தகுதி இல்லை நீ இப்போது சங்கராச்சாரியே அல்ல; இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. பல்லக்கை விட்டு இறங்கு" என உ.பி காவல்துறை அதிகாரிகள் தடை போட்டனர். ஆத்திரமடைந்த சங்கராச்சாரி சீடர்களுக்கும் காவல்துறைக்கும் மோதல். சங்கராச்சாரியின் பெண் பக்தர்கள் தாக்கப்பட்டனர். சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல்லக்கில் சீடர்களுடன் புனித நீராட வந்த பார்ப்பன சங்கராச்சாரி மகர மேளா நடக்கும் இடத்தில் சீடர்களுடன் தர்ணா போராட்டம் நடத்தினார். கஜேந்திர சிங் என்ற வழக்கறிஞர் உயர் நீதிமன்றத்தில் காவல்துறைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். இதைத்தொடர்ந்து பெண் துறவிகள் தாக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்த மகளிர் ஆணையம் உ.பி காவல்துறைக்கு தாக்கீது அனுப்பி உள்ளது. காவி உடை சாமியார் யோகி ஆதித்யநாத் ஆளும் உ.பியில் இந்த சங்கரச்சாரி அர்ச்சனை நடந்துள்ளது.

இதேபோல் ஒரு நிகழ்வு தமிழ்நாட்டில் நடந்திருந்தால் அவ்வளவுதான்! சங்கிகள் தொடை தட்டிக் கிளம்பி இருப்பார்கள்; மதுரை நீதிமன்றம் தன்னிச்சையாக வழக்கை எடுத்திருக்கும். அய்யோ தமிழ்நாட்டில் இந்து விரோத ஆட்சி என்று ஓலமிட துவங்கியிருப்பார்கள்.

# வாராது வந்த மாமணி ஸ்டாலின்!

***கடந்த சனவரி-24, சூலூர் பாவேந்தர் பேரவை நடத்திய மொழிப்போர் நினைவு உணர்ச்சி விழா மற்றும் பெரியார் நினைவு அறிவு விழாவில் கழகத் தலைவர் ஆற்றிய உரை:***

நமக்கு வந்திருக்கிற ஆபத்து நமக்கு அமைந்திருக்கிற ஒரு வாய்ப்பு. மூடநம்பிக்கைகள் அற்ற பகுத்தறிவுவாதிகளாக நாம் இருக்கிறோம். ஆனால் எங்களுக்கெல்லாம் ஒரு மூடநம்பிக்கை இருந்தது. நன்றாக பேசுபவர்தான் நல்ல தலைவராக இருக்க முடியும் என்று கருதிக்கொண்டிருந்தோம். அதனால் ஸ்டாலின் கொஞ்சம் தகுதி குறைவானவர்தான் என்ற மூடநம்பிக்கை அவர் ஆட்சிக்கு வந்து திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு வரை இருந்தது. அந்த மூடநம்பிக்கை அதற்கு பின்பு மறைந்தது. பேச்சாளராக இருக்க வேண்டியது அவசியம் இல்லை, செயல்படுபவராக இருந்தால் போதும் என்பது அவர் ஆட்சிக்கு வந்த பின்னால்தான் நமக்குத் தெரிய வந்தது. பதவி இல்லாத 10 ஆண்டுகாலத்தில் அவர் என்னென்ன நினைத்து வைத்திருந்தார் என்பதெல்லாம் தற்போதுதான் தெரிகிறது. இன்னும் 10-ஆண்டுகள் முடிந்தால்தான் வெளியே வரும் என நினைக்கிறேன். யாரும் எண்ணிப் பார்க்காத திட்டங்கள் பலவற்றை அறிவிக்கிறார்.



அடித்தட்டு மக்களிடம், கிராமப்புற மக்களிடம், அதிலும் உழைக்கும் மக்களிடம் கல்வி முழுமையாகப் போய் சேரவில்லை. கல்வி கிடைத்தாலும் அவர்கள் உரிய இடத்தில் பணி அமர்த்தப்படவில்லை. அந்த இடங்களை எல்லாம் அவர்கள் பெறுவதற்கான முயற்சிகளை இந்த அரசு உரிய முறையில் எடுத்து வருகிறது. எண்ணிப் பார்க்க முடியாத ஒரு புதிய தமிழ்நாட்டைக் கட்டியது கலைஞராக இருக்கலாம். அதை நல்ல வடிவத்தோடு ஆக்கி, பிரமிக்கத்தக்க அளவுக்கு வெளிநாடு, வெளிமாநிலங்கள் எல்லாம் பார்க்கத்தக்க அளவுக்கான ஒரு மாநிலமாக மாற்றியதில் ஸ்டாலினுக்கு பெரிய பங்கு இருக்கிறது. அதை நாம் மகிழ்ச்சியோடு பார்த்த வண்ணம் சொல்கிறோம்.

அரசியல் என்பது ஆட்சியில் இருக்கிறார்கள், திட்டங்களை செய்வார்கள் என்பது மட்டுமல்ல. அரசியலை நாம் எப்படி பார்க்க வேண்டும் என்றால், அண்மையில் குரூப்-1, சர்வீஸ் பிரிவில் தேர்ச்சி பெற்று பணிக்கு தேர்வானதில் ஆண்களை விட பெண்கள் அதிகம். தேர்வானது ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னால்தான். "களப்பணிக்கு செல்வதற்கு பெண்களாகவே பெரும்பாலும் இருப்பதால் எங்களுக்குச் சில சிக்கல்கள் ஏற்படுகிறது. கொஞ்சம் ஆண்களும் உள்ளே வருகிற மாதிரி நிலையை உருவாக்க வேண்டிய தேவை தற்போது இருக்கிறது" என்று இப்போது அதிகாரிகள் மட்டத்தில் பேசுகிறார்கள். தமிழ்நாட்டில்தான் இதையெல்லாம் பார்க்க முடிகிறது.

கல்வி கற்க வேண்டுமென்று வந்துவிட்டால் பெண்கள் கல்வியில் மட்டுமே கவனமாக இருந்து படிக்கிறார்கள். அதற்குப் பின்னால் அவர்களுக்கு வாய்ப்புகள் உருவாகவில்லை. குடும்பங்கள் ஒரு பக்கம் தடையாக இருந்து இருக்கிறது. இன்னொரு பக்கம் அந்தப் பெண்களுக்கான உரிமை என்று பேசிய பின்னால், அவர்களுக்கு உரிய வழிகாட்டுதலை செய்ய வேண்டும். அதற்காக இயங்குகிற துறையை நினைத்துப்பார்த்தால் நமக்கு பெரிய பிரமிப்பாக உள்ளது.

அண்மையில் நான் ஒன்றைக் கேள்விப்பட்டேன். அது இன்னும் வெளியே வரவில்லை என்று நினைக்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், பத்தாம் வகுப்பில் தோல்வியடைந்தவர்களைப் பற்றி ஒரு ஆய்வு செய்திருக்கிறார்கள். தேர்வில் அவர்கள் தோல்வி அடைந்ததற்கு என்ன காரணம்? மாணவன் ஏன் தோல்வியடைந்தார்? பத்தாம் வகுப்பு தேர்வில் ஏன் தோற்றுப்போனான்? மாணவனுக்கு ஏதாவது குடும்ப சிக்கலா? அப்பா இல்லாமல் இருக்கலாம், வறுமையாக இருக்கலாம். பல காரணங்கள் இருக்கலாம். என்ன காரணம்? அல்லது அப்பா குடிகாரராக இருக்கலாம். இத்தகைய குடும்பப் பின்னணியில் இருந்து அம்மாணவர்கள் வந்திருக்கலாம். இவர்களைப் பற்றியெல்லாம் கணக்கெடுத்து வைத்திருக்கிறார்கள். இப்போது தான் தெரிகிறது. அந்த திட்டத்தில் வேலை செய்கிற நபர்கள் சொல்லித்தான் கேள்விப்பட்டேன்.

அப்படி கணக்கெடுக்கப்பட்ட அவர்களையெல்லாம் உடனடியாக அடுத்து வருகிற துணைத் தேர்வில் எழுத வைப்பதற்கு குறுகிய காலத்தில் பயிற்சி கொடுத்து, அவர்களை தேர்ச்சியடைய வைத்திருக்கிறார்கள். அத்தோடு, பனிரண்டாம் வகுப்பில் அவர்களுக்கு எடுக்கிற பாடத்தில் தொடர்ந்து அவர்களை இரண்டு ஆண்டுகள் கண்காணித்திருக்கிறார்கள். 1304 மாணவர்களை அவர்கள் முழுமையாகத் தேர்வடையச் செய்து அவர்களுக்கான விருப்பமான கல்விகளுக்கான இடங்களை தனியார் நிறுவனங்களிலும் பெற்று, படிப்புக்கான கட்டணமும் கட்ட வேண்டாம், கல்வி கட்டணம் இல்லை, விடுதிக்கட்டணம் இல்லை என்ற நிலையில் அனைவரையும் கல்லூரியில் சேர்த்திருக்கிறார்கள். அந்த 1304 மாணவர்களும் இந்த ஆண்டு கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புறங்களில் இருக்கிற மாணவர்கள் மட்டும் முதலில் கணக்கெடுப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள். முதல்ல ஏன் அப்படி ஆச்சு? என்ன காரணம் அதைப் பாருங்கள் என்று சிந்திப்பது நமக்குப் பெரிய அதிசயமாக உள்ளது. இப்படி ஒரு முயற்சியை ஒரு அரசு செய்திருக்கிறது என்றால், சமூகத்தின் மீது அக்கறை, சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் மீது அக்கறை, சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மீது கூடுதல் அக்கறை இருக்கிறது என்பதுதான் அர்த்தம். இதெல்லாம் எங்கிருந்து வருகிறது என்றால், சுயமரியாதை சிந்தனை.

திராவிட இயக்கம் என்பது என்ன? ஆரியர்கள் வந்து அறிவை தடுத்து வைத்தார்கள். திராவிட இயக்கம் அதை உடைத்துவிட்டது. தடையெல்லாம் உடைத்துவிட்டது. எல்லோரும் கல்வி பெற வேண்டும் என்பதுதான் அந்த தடைகளை உடைப்பதற்கான தொடக்கமாக திராவிட இயக்கம் கையிலெடுத்தது. முதலில் கல்வியில் சமூக உரிமைகள் எல்லாம் பெற்றுவிட்டோமா என்றால் முழுமையாக இல்லாமல் இருக்கலாம். ஒரே நேரத்தில் அனைத்தும் சாதித்துவிட வேண்டும் என்று நம்மால் சொல்ல முடியாது. அதற்கான வாய்ப்புகளும் இல்லை. படிப்படியாகத்தான் செய்வார்கள். ஆனால் ஒரு சிறு இடைவெளி இல்லாமல் செய்து கொண்டிருக்கிற இந்தக் காலத்தை நாம் பெரும் மகிழ்ச்சியோடு பார்க்கிறோம். சமூக அக்கறை உள்ளவர்கள் யாராக இருந்தாலும் இதை பார்ப்பார்கள். இப்படி எல்லாம் நாம் எண்ணிப் பார்த்திருக்க மாட்டோம்.

வாராது போன்ற மாமணி என்றெல்லாம் சொல்லுவார்களே அதுபோல, வாராது வந்த மாமணியாகத்தான் இப்போது ஸ்டாலின் வாய்த்திருக்கிறார். இதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால், சமூகத்தில் ஒவ்வொரு பகுதியிலும் இருப்போர் தங்களுக்கான பங்குகளைத் தங்களுக்கான பணிகளை நேர்மையாகச் செய்து, முழுமையாகச் செய்து ஈடுபாட்டோடு செய்து இன்னும் நல்ல தமிழ்நாட்டை உயர்த்துவோம்.

# மோடியை அதிரவைத்த ‘எப்ஸ்டீன் பைல்ஸ்’

ஜனநாயகம் என்றால் அமெரிக்கா; சுதந்திரம் என்றால் அமெரிக்கா என்று பிம்பங்கள் கட்டமைக்கப்பட்டன. அந்த பிம்பங்களை சுக்கு நூறாக உடைத்து ‘எப்ஸ்டீன் பைல்ஸ்’ உலகையே அலற விட்டிருக்கிறது. இதில் முக்கிய பிரபலங்களின் பெயருடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பெயரும் அடிபடுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அதே வேளையில் அமெரிக்காவிடம் இந்தியாவை அடகு வைக்கும் வகையில் ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கிறது. இவை அனைத்திற்கும் ஒன்றிய அரசு தரப்பில் இருந்து விரிவான விளக்கம் எதுவும் வெளிவராத நிலையில் மக்களிடையே சந்தேகங்கள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

‘எப்ஸ்டீன் பைல்ஸ்’ என்றால் என்ன எனப் பார்ப்போம். அமெரிக்காவில் பெரும் பணக்காரரான ஜெப்ரி எப்ஸ்டீன் சிறுமிகளைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் கடந்த 2019-ம் ஆண்டு கைது செய்யப்பட்டார். இதற்கு தண்டனையாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், மர்மமான முறையில் உயிரிழந்தார். எப்ஸ்டீன் உயிரிழப்பிற்கு பின்னர் அவர் தொடர்பான வழக்கு விசாரணையின் போது பல ஆவணங்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்டவையே ‘எப்ஸ்டீன் பைல்ஸ்’ ஆகும். நீங்கள் நினைப்பது போல இது வெறும் ஒரு ஆவணம் அல்லது கோப்பு மட்டும் அல்ல. புகைப்படங்கள் வீடியோக்கள் மின்னஞ்சல் உரையாடல்கள் விமான பயணப் பதிவுகள் என பல ஆதாரங்களை உள்ளடக்கியது.

**எப்ஸ்டீன் பைல்ஸ் சர்வதேச பாலியல் குற்றவாளியின் பதிவுகள் உலக அரசியலை ஆட்டிப் படைக்கிறது. டிரம்ப்- மோடி வர்த்தக ஒப்பந்தத்தின் பின்னணியில் இந்த பைல்ஸ் ரகசியங்கள் இருப்பதாக குற்றச் சாட்டுகள் எழுகின்றன.**


எப்ஸ்டீன் தற்கொலை செய்து கொண்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும் எப்ஸ்டீனுக்கும் ட்ரம்புக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அது பற்றிய ரகசியம் வெளிவந்து விடக் கூடாது என்பதற்காக எப்ஸ்டீன் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்க அரசியல் கட்சிகள் சந்தேகம் எழுப்பின. பல அரசியல் கட்சிகள் இந்த ஆதாரங்களைப் பொதுவெளியில் வெளியிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன. இந்த கோரிக்கை வலுப்பெற்ற நிலையில் கடந்த ஆண்டு நவம்பரில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் ‘எப்ஸ்டீன் கோப்புகள் வெளிப்படைத் தன்மைச் சட்டம்’ நிறைவேற்றப்பட்டது. கடந்த டிசம்பர் 19ஆம் தேதிக்குள் அனைத்து ஆவணங்களும் வெளியிட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி கடந்தாண்டு இறுதியில் முதற்கட்டமாக ஜனநாயகக் கட்சியின் ‘மன்ற மேற்பார்வைக் குழு’ (House Oversight Committee) சுமார் 70 புகைப்படங்களை வெளியிட்டது. பிறகு மின்னஞ்சல்கள், வீடியோக்கள், ஆவணங்கள் எனப் பல ஆதாரங்கள் சிறுகச் சிறுக வெளியாகின. 2024 தேர்தல் சமயத்தில், டிரம்பிடம் இதுபற்றிக் கேட்டபோது, “ நீங்கள் கேட்டால் நான் அதை வெளியிடுவேன்” என்று கூறியிருந்தார்.

## நீதித்துறையில் வெளியீடு

30 லட்சம் பக்கங்கள் 1,80,000 புகைப்படங்கள் மற்றும் 2,000 வீடியோக்கள் அடங்கிய ஜெப்ப்ரி எப்ஸ்டீன் தொடர்பான லட்சக்கணக்கான புதிய ஃபைல்களை, அமெரிக்க நீதித்துறை ஜன. 30ம் தேதி வெளியிட்டது. இந்தக் பைல்களில் ஜெஃப்ரி எப்ஸ்டீனின் சிறைவாசம் பற்றிய தகவல்கள், உளவியல் அறிக்கை மற்றும் அவர் சிறையில் இருந்த போது ஏற்பட்ட மரணம் குறித்த விவரங்கள் உள்ளன. இது தவிர, எப்ஸ்டீனுக்கும் உயர்மட்ட பிரமுகர்களுக்கும் இடையிலான மின்னஞ்சல்களும் இதில் இடம்பெற்றிருந்தன. புதிதாக வெளியிடப்பட்ட பைல்ஸில் அமெரிக்க அதிபர் டிரம்ப் பற்றி நூற்றுக்கணக்கான முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களில் எப்ஸ்டீனுக்கும் உலகின் முதன்மையான செல்வந்தர்கள் உடனான மின்னஞ்சல் உரையாடல்களும் அடங்கியிருக்கிறது.

## மோடிக்காக பரிந்துரைத்த அம்பானி




அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், 25 ஆண்டுகளுக்கு முன்பு, நியூஜெர்சியில் 13- 14 வயதுடைய சிறுமியிடம் பாலியல் வன்கொடுமைக்கு முயன்றதாக எப்ஸ்டீன் கோப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, பாதிக்கப்பட்ட சிறுமியின் தோழி அமெரிக்க புலானய்வு விசாரணையில் அளித்த வாக்குமூலத்தில், பாலியல்ரீதியாக தனது தோழிக்குத் தொல்லை அளித்து முறையற்ற உறவுகொள்ளத் தொடர்ந்து கட்டாயப்படுத்தியதால், டிரம்ப்பை தனது தோழி கடித்ததாகத் தெரிவித்துள்ளார். அதன் பிறகு, தனது தோழி சிரித்ததால் அவர் முகத்தில் தாக்கப்பட்டதாகவும், எப்ஸ்டீனும் தோழியைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜூலை 9, 2017 தேதியிட்ட மின்னஞ்சல் ஒன்றில் பிரதமர் மோடி பெயர் இடம்பெற்றிருப்பதாக தகவல்கள் வெளியாகின. இந்த மின்னஞ்சல் தேதி காலகட்டத்திற்கு முன்னதாக, அதாவது ஜூலை 4 - 6 வரை இஸ்ரேலுக்கு பிரதமர் மோடி அரசு முறைப்பயணம் சென்றிருந்தார். அதே போல், 2017 ஜூன் 25, 26 தேதிகளில் அமெரிக்க பயணம் மேற்கொண்ட மோடி, அங்கு அதிபர் டிரம்ப்பைச் சந்தித்தார். மேலும், 2017 மார்ச் 16 அன்று எப்ஸ்டீனுக்கு தொழிலதிபர் அனில் அம்பானி அனுப்பிய செய்தியில், அதிபர் டிரம்ப்புடனான பிரதமர் மோடியின் சந்திப்புக்கு உதவுமாறு கேட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. இதனிடையே, ஒன்றிய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, கடந்த 2014 டிசம்பர் மாதத்தில், எப்ஸ்டீனுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிய செய்தியும் வெளியாகியுள்ளது. இப்படியாக ‘எப்ஸ்டீன் பைல்ஸ்’ அமெரிக்காவை மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகத் தலைவர்களையுமே ஆட்டம் காண வைத்திருக்கிறது.

எப்ஸ்டீன் பைல்ஸில் பிரதமர் மோடியின் பெயர் இடம்பெற்றிருப்பது குறித்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் அளித்த பதிலில், “ ‘எப்ஸ்டீன் பைல்ஸ்’ என்று அழைக்கப்படும் ஆவணங்களில் உள்ள இ-மெயில் அறிக்கையில், பிரதமரின் பெயரும், அவருடைய இஸ்ரேல் பயணமும் இடம்பெற்றிருப்பதைப் பார்த்தோம். 2017ம் ஆண்டு ஜூலை மாதம் பிரதமர் இஸ்ரேலுக்கு அலுவல் ரீதியாகப் பயணம் மேற்கொண்டார் என்பதைத் தவிர, அதில் இருக்கும் அனைத்துமே குற்றவாளியின் குப்பை வதந்தி. இவை கடும் கண்டனத்துடன் நிராகரிக்கப்பட வேண்டும்” என தெரிவித்திருந்தார்.

**இந்திய - அமெரிக்க ஒப்பந்தம்** எப்ஸ்டீன் பைல்ஸ் உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ள நிலையில், இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் மார்ச் மாத நடுப்பகுதியில் கையெழுத்தாகும் என வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். இந்த ஒப்பந்தத்தின்படி, அமெரிக்கா பரஸ்பர வரிகளை 18 சதவீதமாக குறைக்கும். அதேசமயம், இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தி, அமெரிக்காவிலிருந்து 500 பில்லியன் டாலர் மதிப்பிலான எரிசக்தி மற்றும் தொழில்நுட்பப் பொருட்களை வாங்கும் என்பது உள்ளிட்டவை அடங்கியுள்ளன. ஆனால், இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் காலக்கெடு குறித்த தகவல்கள் ஏதும் பொதுவெளியில் பகிரப்படவில்லை. இறுதி கட்டப் பேச்சுவார்த்தையில் அமெரிக்காவுடனான இந்தியாவின் வர்த்தக ஒப்பந்தத்தின் விவரங்கள் முடிவு செய்யப்பட்டு வருவதாக மட்டும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவுக்குப் பணிகிறதா இந்தியா?

அமெரிக்கா உலக நாடுகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நாட்டாமைத் தனம் செய்வதை விரும்பும் நாடு. அவ்வாறு டிரம்பிடம் சிக்கக் கூடாத ஒரு ஆவணம் சிக்கிக் கொண்டு அதில் உள்ள பட்டியல் நாடுகளை அமெரிக்கா குறிவைக்கிறது. அவ்வாறு அமெரிக்கா வைத்த குறியில் சிக்கியுள்ளது இந்தியா, சமீ பத்தில் - பாகிஸ்தான் - இந்தியா இடையேயான போர் நிறுத்தம் ஏற்பட்ட போது, நான் சொல்லி தான் இந்தியா போரை நிறுத்தியது என்றும், ரஷ்யா விடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தவும், அமெரிக்க எண்ணெயை அதிக அளவில் வாங்கவும் இந்தியா ஒப்புக் கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறினார். டிரம்ப் தனது ’ட்ரூத் சோஷியல்’ சமூக வலைதளப் பதிவில், அமெரிக்கப் பொருட்கள் மீதான அனைத்து வரி மற்றும் வரி அல்லாத தடைகளை இந்தியா பூஜ்ஜியமாகக் குறைக்கும் என்று கூறினார். ஆனால் இந்தியா இதுவரை எந்தவொரு அதிகாரப்பூர்வ அறிக்கை யிலும் இதை பற்றி குறிப்பிடவில்லை. இப்படி, "மாப்பிள்ளை அவரு தான்... அவர் போட்டிருக்கும் சட்டை என்னு டையது" என்பது போல் இந்தியாவின் பிரதமரை அமெரிக்காவில் இருந்து டிரம்ப் இயக்குவது போல் தான் தோன்றுகிறது என எதிர்கட்சிகள் விமர்சனத்தை முன் வைக்கின்றன.

## ஆவணங்கள் மூலம் ஆப்பா?

எப்ஸ்டீன் பைல்ஸ்சில் பிரதமர் மோடி பெயர் இருப்பது குறித்து விரிவான அறிக்கையை ஒன்றிய அரசு மக் களுக்கு கொடுக்கவில்லை. அதே வேளையில், இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்படும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. ஹனிடிராப் மூலமாக ஒருவரை வலையில் வீழ்த்தி ராணுவ ரகசியங்களை தெரிந்து கொள்வது போல், எப்ஸ்டீன் ஃபைல்ஸ் சிக்கி உள்ளது. இதனை எதற்காக ஜெப்ரி எப்ஸ்டீன் ஆவணப்படுத்தினார் என்பது அவருக்குத்தான் தெரியும். ஆனால் இது குறித்து உண்மையை உலகிற்கு எடுத்துரைக்க அவர் உயிருடன் இல்லை. அதே வேளையில் ஒரு நாடு யாருடன் ஒப்பந்தம் வைக்க வேண்டும் என்பதை அந்த நாடும், அதற்கு உடன்படும் நாடும் தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், இந்த கோப்புகளை வைத்துக் கொண்டு டிரம்ப் மிரட்டும் தொனியில் ஈடுபட்டு ஒவ்வொரு நாடுகளுடனும் ஒப்பந்தத்தை உருவாக்கி வருகிறார். இதில் ஒரு சில நாடுகள் சிக்காமல் இருந்தால் அவர்களை போர் மூலமாக தூண்டிவிட்டு தன்னிடம் வந்து சமரசம் பேச வேண்டும் என விரும்புகிறார். ரஷ்யா-உக்ரைன், பாலஸ்தீனம்- இஸ்ரேல், என அமெரிக்கா தூண்டிவிட்டு சிதைத்த நாடுகளின் பட்டியல்கள் இன்னும் நீளும். இப்போது கவனம் வெனிசுலா, ரஷ்யா பக்கம் திரும்பியுள்ளது.

## கூட்டி கழித்துப் பாருங்க கணக்கு தெரியும்

**எப்ஸ்டீன் பைல்ஸ் தொடர்பான வீடியோக்கள், மின்னஞ்சல் உரையாடல்கள் ஜன. 30ம் தேதி வெளியாகிறது. அடுத்த இரண்டு நாட்கள் கழித்து பிரதமர் மோடி பெயர் அதில் இடம்பெற்றிருப்பதாக செய்திகள் வெளியாகின்றன. இதனை தொடர்ந்து அமெரிக்கா–இந்தியா இடையே வர்த்தகம் நடைபெற்று வருவதாக செய்தி வருகின்றன. இதனையடுத்து டிரம்ப் தனது பதிவில், "இந்தியப் பிரதமர் மோடியுடன் பேசியது எனக்குப் பெருமையாக இருந்தது. ரஷ்ய எண்ணெயை வாங்குவதை நிறுத்திவிட்டு அமெரிக்காவிலிருந்து, குறிப்பாக வெனிசுவேலாவில் இருந்தும் எண்ணெய் வாங்க அவர் ஒப்புக்கொண்டார்" எனத் தெரிவித்திருந்தார். ஆனால், எப்ஸ் டீன் ஃபைல்ஸ் குறித்து விரிவான விளக்கம் எதுவும் கொடுக்காமல், விஷயத்தை வேறு பக்கம் திசை திருப்ப ஒப்பந்தம் குறித்து பேச்சை எடுத்து இந்தியா வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என பாஜ கட்சியினர் கூறி வருகின்றனர்.**

**– (செய்தி–தினகரன்)**

## கலாச்சார அமைப்பு அரசியல் அமைப்பானது

ஆர்.எஸ்.எஸ் அமைப்பு 2025 அக்டோபரில் தனது 100வது ஆண்டில் கால்பதித்துள்ளது. இந்த முக்கியமான காலகட்டத்தில் தனது கருத்தியலை நாடு முழுவதும் கொண்டு செல்ல பாஜக போன்ற பலமான அரசியல் அதிகாரத்தின் துணை அதற்குத் தேவைப்படுகிறது. கட்சியின் தேசியத் தலைவர் தேர்வு மற்றும் முக்கியக் கொள்கை முடிவுகளில் ஆர்.எஸ்.எஸ் தனது செல்வாக்கை மீண்டும் உறுதிப்படுத்தத் தொடங்கியுள்ளது. முன்னதாக ‘பாஜக தனித்து இயங்கக் கூடியது’ என்ற பிம்பம் உருவாக்கப்பட்ட நிலையில், இப்போது ஆர்.எஸ்.எஸ்-ஸே ‘அடித்தளம்’ என்பது தெளிவுபடுத்தப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் ரகசியமாக நடந்த ஆலோசனைகள் இப்போது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு, மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் கட்சியைப் பலப்படுத்த இந்த வெளிப்படையான கூட்டங்கள் அவசியமாகின்றன என்று பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ் கருதுகிறது. கல்வி, கலாச்சாரம் மற்றும் சமூக மாற்றங்களை வெறும் அரசியலாக மட்டும் பார்க்காமல், ஒரு பண்பாட்டுப் புரட்சியாக முன்னெடுக்க ஆர்.எஸ்.எஸ் விரும்புகிறது. இதற்கு பாஜக-வின் ஆட்சி அதிகாரத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை அவர்கள் இப்போது மறைப்பதில்லை. தேர்தல் வெற்றிகளுக்குத் தொண்டர்களின் பலம் தேவைப்படுவதும், ஆர்.எஸ்.எஸ் தனது நூற்றாண்டு விழா வையொட்டி தனது செல்வாக்கை நிலைநிறுத்த விரும்புவதுமே இந்த வெளிப்படையான உறவுக்குப் பிரதான காரணங்களாகும்.

இப்போது பாஜக-வில் நடந்து கொண்டிருக்கின்ற குழப்பங்களைத் தீர்த்து வைப்பதற்கு பாஜக தலைவர்கள் ஆர்.எஸ்.எஸ் தலைமை அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்காக ஆர்.எஸ்.எஸ்-காரர்கள் சென்னை வந்து இருக்கிறார்கள்.

இதுவரை ‘நாங்கள் வெறும் கலாச்சார அமைப்புதான், பாஜகாவின் அரசியலில் தலையிடுவதில்லை’ என்று கூறிவந்த ஆர்.எஸ்.எஸ், தற்போது தேர்தல் வியூகம் மற்றும் கட்சிப் பதவிகள் குறித்து நேரடியாகப் பேசுவது, பூனைக்குட்டி வெளியே வருகிறது என்று கூறுவது போன்று மறைத்து வைக்கப்பட்ட உண்மை வெளிப்படுவதைக் காணலாம்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# எதிர்கால வேலைத் திட்டங்கள்; கோவை மாவட்டக் கழகம் முடிவு

கோவை மாவட்டக் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் 8/2/2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் தமிழ்ப்புலிகள் கட்சி அலுவலகத்தில் சூலூர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது.



திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழுவில் பேசப்படும் வேலைத் திட்டங்களை பற்றி கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஆலோசனைகளை கூறினர்.

பிப்ரவரி 14 அன்று கழகத் தோழர் மோகனகிருஷ்ணன் விவேகா சுயமரியாதை திருமண விழாவில் தோழர்கள் அனைவரும் குடும்பத்துடன் பங்கேற்று சிறப்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் ஒரு மனதாக எடுக்கப்பட்ட முடிவுகள்

1. கோவை மாநகர புதிய பொறுப்பாளர்கள்

கோவை மாநகர அமைப்பாளர்களாக தோழர்கள் சிவராசு,நவீன், நிலவழகன், மாநகர துணைத் தலைவர்களாக தோழர் சத்தியமூர்த்தி ,

மாநகர துணைச் செயலாளராக தோழர் தரணி , கோவில்பாளையம் பகுதி அமைப்பாளராக தோழர் மோகனகிருஷ்ணன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

2. "மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்!" தலைப்பில் தொடர்ந்து தெருமுனைப் பிரச்சாரங்களை நடத்துவது.

3. கோவையில் வடநாட்டார் குறிப்பாக பனியா ஆதிக்கம் மிகுந்து காணப்படுகிறது. இவர்கள் இந்துத்துவ அமைப்புகளுக்கு நிதி ஆதாரமாகவும் இருப்பதை பற்றி தோழர்களிடம் விவாதிக்கப்பட்டது. இந்நிலையை தலைமையின் கவனத்திற்கு கொண்டு சென்று அவர்களின் ஆலோசனையின் படி இந்த விவாகரத்தில் மேற்கொண்டு செயல்பட முடிவு செய்யப்பட்டது

4. தோழர்கள் "மோகன கிருஷ்ணன் விவேகா" சுயமரியாதை திருமண விழாவில் பெரியார் முழக்கம் முதல் தவணை சந்தா தொகையை தலைவரிடம் வழங்குவது

5. திராவிடர் இயக்கங்களின் வரலாற்று நிகழ்வுகளை, போராட்டங்களை, தலைவர்களை பற்றி சூழலுக்கு ஏற்றவாறு மாதம் இரண்டு இணைய வழி கூட்டங்களை இளம் தோழர்கள் நடத்துவது

6. வருடம் இரண்டு பயிற்சி வகுப்புகளை நடத்துவது

7. ஜாதிய தீண்டாமை கொடுமைகளை தொடர்ந்து கண்காணித்து ஒழிப்பதற்கான பணி செய்வது

தோழர்கள் சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல் குமார், வெங்கட், சூலூர் தமிழ்ச்செல்வி,மாதவன், பொங்கலூர் கார்த்தி, கிருஷ்ணன், இராஜாமணி, சத்தியமூர்த்தி, தரணி ,மோகனகிருஷ்ணன், நவீந்திரகுமார், கதிரவன், இராஜசேகரன், ஹரிஹரன்,சுதர்சன் கலந்து கொண்டனர்.

# கழகத் தலைவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்

## எழில் நிலா- தினேஷ் குமார் வாழ்க்கை இணையேற்பு விழா!

திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த குப்புசாமி - சுலோச்சனா ஆகியோரது மகன் தினேஷ் குமார் அவர்களுக்கும் திருப்பூர் மாவட்டம் சிட்கோ பகுதியைச் சார்ந்த ஒருங்கிணைந்த சிறப்பாசிரியர்கள் சங்க மாநிலத் தலைவர், பழ. கௌதமன் - அமுதா ஆகியோரது மகள் எழில் நிலா ஆகியோருக்கும் வாழ்க்கை இணையேற்பு விழா 25.01.2026 அன்று காலை 9 மணியளவில் திருப்பூர் ஊத்துக்குளி காமாட்சி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார்.



கவிஞர் பழ. புகழேந்தி அவர்கள் வரவேற்புரையாற்றினார். சுப. வீரபாண்டியன் (தலைவர், திராவிடர் இயக்க தமிழர் பேரவை) வாழ்த்துரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி மணமக்களுக்கு வாழ்க்கை துணை நல ஒப்பந்தம் செய்து வைத்து வாழ்த்துரையாற்றினர்.

வந்தியதேவன் (ம.தி.மு.க கொள்கை பரப்புச் செயலாளர்), காமராஜ் (சிபிஎம் மாநிலக் குழு உறுப்பினர்), ஊத்துக்குளி குமார் (தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்டச் செயலாளர்) ஆகியோர் வாழ்த்துரையாற்றினார். உஷா (அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க சிட்கோ கிளைச் செயலாளர்) நன்றி கூறினார்.

## கழகத்தில் இணைந்த புதிய தோழர்கள்

தாம்பரத்தில் ம. கி. எட்வின் பிரபாகரன் (சென்னை மாவட்ட அமைப்பாளர்) அருண் கோமதி (தாம்பரம் நகர அமைப்பாளர்), குகன் ஆகியோர் முன்னிலையில், பிப்-8, மாலை 6 மணிக்கு, தாம்பரத்தில், தோழர்கள் கிரிஸ்டோ, பிரதீபா, மகேஷ் ஆகியோர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.



மதிமுக மூத்த தோழர் துரை. மணிவண்ணன் தலைமையில், தோழர்களின் கலந்துரையாடல் நடந்தது. "இயக்கம் என்றால் என்ன?" "இயக்கமாதலின் அவசியம், பயன், தேவை" குறித்து தோழர் துரை மணிவண்ணன் ஆற்றிய உரை, தோழர்களை உத்வேகமடையச் செய்தது. தோழர் எட்வின் "பெரியார் வாழ்ந்த காலச்சூழலில் இயக்கவியலின் தன்மையும், தற்போதுள்ள மாறுபட்ட சமூகச் சூழலுக்கு ஏற்றவாறு, இயக்க அணுகுமுறையில் ஏற்பட வேண்டிய மாற்றங்கள்" குறித்தும் பேசினார்.

அருண் கோமதி, "வாசிப்பின் அவசியம் குறித்தும், தாம்பரத்தில் தொடர்ச்சியான இயக்க செயல்பாடுகளின் தேவை" குறித்தும் கருத்துகளை பகிர்ந்து கொண்டார். மாநில சுயாட்சி மற்றும் சட்ட நுணுக்கங்களைப் பற்றி கிரிஸ்டோவும், பெண் விடுதலையிலும் ஜாதி ஒழிப்பிலும் பெரியார் கருத்துகளின் வீச்சை பற்றி பிரதீபாவும், மூடநம்பிக்கைகளால் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் பெண்ணடிமைத்தனத்தின் தாக்கம் குறித்து மகேசும் அறிவார்ந்த கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். புதிய தோழர்களுக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய " நாத்திகம்: சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள்" நூல் வழங்கப்பட்டது. கலந்துரையாட, மதிமுக தோழர் இனியவன் இடமளித்தது குறிப்பிடத்தக்கது!!

## அருந்ததியர் சமூகநீதி கூட்டமைப்பு

அருந்ததியர் சமூகநீதி கூட்டமைப்பின் சார்பாக அருந்ததியர் உள் ஒதுக்கீடு மற்றும் சமூக முன்னேற்றம் குறித்த மாநில கலந்தாய்வு கூட்டம் 04.02.2026 செவ்வாய்கிழமை காலை 11 மணியளவில் நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் உள்ள சாந்தி இன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.மாநில ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். அருந்ததியர் சமூக நீதி கூட்டமைப்பின் மாநில அமைப்பாளர் V. அலமேலு தலைமை வகித்து நோக்கவுரையாற்றினார்.




(Manager-voice program, Dhwanin foundation) M. அய்யப்பன், (ஆதித்தமிழர் கட்சியின் நிறுவனத் தலைவர்) கு. ஜக்கையன், (த. அ. இ. முன்னணி மாநில ஒருங்கிணைப்பாளர்) S. T. கல்யாணசுந்தரம், (சமூக விடுதலை முன்னணி) சுந்தர், (தமிழ்ப் புலிகள் கட்சியின் துணை பொதுச்செயலாளர்) செல்வ வில்லாளன், (விடுதலை வேங்கை கட்சியின் நிறுவனத் தலைவர்) தமிழ் இன்பன், (TN SCA Best Association மாநில பொறுப்பாளர்) ஜெகதீஸ்வரன், (இந்தியன் வங்கி ஊழியர் சங்கம் உதவி தலைவர்) S. முருகேசன், (திராவிடர் தமிழர் கட்சி மாநில இணைச்செயலாளர்) வேங்கை பொன்னுசாமி ஆகியோர் கருத்துரையாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள் இட ஒதுக்கீட்டு உரிமை என்ற தலைப்பில் (ASJF) செய்யும் சமூக செயல்களை பாராட்டி சமூக நீதிகக்காக சமுகப்பணி செய்யும்போதும், உரிமைக்காக போராடும்போதும் அனைவரும் ஒன்று திரண்டு உறுதியாக நிற்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த அமைப்பிற்கு திராவிடர் விடுதலைக் கழகம் உறுதுணையாக நிற்கும் எனவும் உங்களுக்காக சமூக அக்கறை உள்ள பலரை ஒன்று திரட்டுவோம் என கருத்துரையாற்றினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஒரு மாநில அரசின் சமூக நலத்துறை செய்யும் பணிகளை இந்த அமைப்பு செய்வதை பாராட்டினார்.

## புதுவையில் அண்ணா நினைவுநாள் கருத்தரங்கு

புதுச்சேரியில், 3/2/26 அன்று மாலை 6 மணிக்கு, பெரியார் சிந்தனையாளர் இயக்கம் சார்பில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் மற்றும் திராவிட இயக்க வேங்கைகள் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது.



"1965- மொழிப்போராட்ட வரலாறு, பராசக்தி படத்தின் வாழும் சாட்சி" என்றத் தலைப்பில் பொள்ளாச்சி மா. உமாபதி (திமுக) மொழிப்போர் தியாகிகள் குறித்து பல வரலாற்று நினைவுகளை பகிர்ந்து கொண்டார். "தீ பரவட்டும்" என்ற தலைப்பில் இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) பேரறிஞர் அண்ணா செய்த சாதனைகளையும், தமிழ்நாட்டில் அண்ணாவின் தாக்கமும், அரசியலில் சுயமரியாதை இயக்கத் தொண்டனாக அவர் செய்த செயல்களையும் பட்டியலிட்டு உரையாற்றினார். கழகத் தோழர்கள் ப. அருண் (இளைஞரணி மாவட்ட அமைப்பாளர்), கடலூர் சிவா, திராவிட மகிழன், கு.குமார், த.யாழினி, சுகந்தன் (கொளத்தூர் ஒன்றிய மாணவர் கழக அமைப்பாளர்), அசோக் , உதயா ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

## கழக ஏட்டுக்கு சந்தா தோழர்கள் ஆர்வம்

● சென்னையில் கடந்த சனவரி-13 அன்று நடைபெற்ற பொங்கல் விழாவில் திருவல்லிக்கேணி பகுதிக் கழகம் சார்பாக சந்தாவாக ரூ.30000 அருண் (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்) கழகத் தலைவரிடம் வழங்கினார்.

● திருச்சி மாவட்டக் கழகம் சார்பில் தோழர் மனோகரன் (திருச்சி மாவட்டத் தலைவர்) 20 பெரியார் முழக்க சந்தாவுக்கான தொகை ரூ.6000 பெரியார் முழக்க வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார்.

● வடசென்னை மாவட்டக் கழகம் சார்பில் சேத்துப்பட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர்) அவர்கள் முதற்கட்டமாக 25 சந்தா ரூ.7500-அய் பிரசாந்த் (புரட்சிப் பெரியார் முழக்கம் செய்தியாளரிடம் வழங்கினார்.

**நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்)**

**கழகத் தலைவர் எழுதி வரும் பெரியார் மீதான ஜீவாவின் விமர்சனங்களுக்கு பதிலடி அடுத்த இதழில் வெளிவரும்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted :February 13, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran